11th March 1959]

மற்ருெரு நிலத்திற்குப் பூச்சி போய் விடுகிறது. அந்த நிலைமையின் காரணமாக ஒரே சமயத்தில் எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்துகளை அடிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி எல்லா நிலங்களுக்கும் அரசாங்கமே உபயோகிக்கக்கூடிய திட்டம் இல்லை. இப்பொழுது பூச்சி மருந்துகள் பாதி விலைக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்ற யோசனை இல்லை. அம்மாதிரியான கோரிக்கையும் வரவில்லை.

Pest attack on betel vines

* 710 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to place on the table of the House a statement detailing the progress made in investigating the remedial measures for betel vines against pests in the State and the total amount spent during the current year for the investigation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer[a] is placed on the table of the House.

SRI M. KALYANASUNDARAM : எவ்வளவு வருஷ காலமாக இந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்த ஆராய்ச்சி நடைபெறும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1956–57-ல் தொடங்கி இன்னும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இது ஒரு கஷ்டமான ஆராய்ச்சி. மூன்று வருஷ காலமாக இது ஆராய்ச்சி செய்யப்பட்டு இப்பொழுது முடியும் தருவாயில் இருக்கிறது. சில முடிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

SRI K. ANBAZHAGAN : பாண்டமங்கலம் வெற்றிலைக் கொடிக்காலில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வரும்போது அங்கே பூச்சி விழுந்து எல்லாம் காய்ந்துபோய்விட்டது. அந்த ஆராய்ச்சி பண்ணையிலிருந்து நிறைய பூச்சி கிளம்பி அந்த வட்டாரம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதையெல்லாம் தவிர்ப்பதற்குத்தான் ஆராய்ச்சி நடைபெறுகிறது. அங்கே பூச்சி வரவில்லை என்ருல் ஆராய்ச்சிபண்ணி பயன் இல்லை (சிரிப்பு). பூச்சி இல்லையாளுல் ஆராய்ச்சி பண்ணுவது பயன் இல்லாமல் போய்விடும். பூச்சி வருவது நல்லதுதான்.

SRI A. VEDARATHNAM : ஆராய்ச்சியின் பயனுக சில முடிவுகள் ஏற்பட்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறினுர். அந்த முடிவுகள் என்ன என்பதை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போர்டோ மிக்ஸ்சர் தெளிப்பதால் நல்ல பலன் கிடைக்கிறது என்பது ஒரு முடிவு. பச்சைக் கொடி, கற்பூரக்கொடி போன்றவைகள்தான் இப்படிப்பட்ட வியாதிகளுக்கு ஆளாகின்றன என்பது மற்ருெரு முடிவு.

Dispensary at Kulasekaram

* 711 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have a scheme to raise the dispensary at Kulasekaram (Kanyakumari district) to the status of a hospital; and

---

[a] Printed as Appendix VII on pages 97 infra.

[11th March 1959

(*b*) if so, what the cost of the scheme is?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) None at present, Sir.

(*b*) Does not arise.

SRI T. T. DANIEL : Sir, in view of the fact that the present dispensary at Kulasekaram has not sufficient space where many of the workers working in the Estates have to go and as there is no dispensary within a range of 9 or 10 miles, will Government consider the desirability of raising the status of this dispensary to the status of a hospital as early as possible?

THE HON. SRI M. A. MANICKAVELU : Though it is called a dispensary, there are 16 beds in that dispensary and there is in-patient accommodation and also there is a hospital in Padmanabhapuram with a bed strength of 46 which is near that place.

Ambar charkha

* 712 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have examined the possibility and desirability of operating Ambar Charkhas by power; and

(*b*) if so, what the conclusions are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The possibility and desirability of operating Ambar Charkhas by power has not been examined or taken up for consideration by the State Government.

(*b*) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : சார், கிட்டத்தட்ட 16 "ஸிபிண்டில் யூனிட்டைப்" போல் அதற்கும் சிறிய யூனிட்டாக இதை ஏன் பவரில் "ஆபரேட்" செய்யக்கூடாது ? இதர மாகாணங்களில் பவரில் ஆபரேட் செய்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காவின் திட்டம் பவரால் ஆபரேட் செய்வது என்பதல்ல. சர்க்கா என்பது கையால் நூற்பது என்னும் திட்டந்தான்.

SRI P. M. MUNUSAMI GOUNDER : தற்போது இந்த அம்பர் சர்க்கா மூலம் வேலை இல்லாதவர்களுக்கு—ஆயிரக் கணக்கானவர்களுக்கு—வேலை கிடைக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமையை உத்தேசித்து இதைப் பவரிலோ, மின்சாரத்திலோ உபயோகிக்கக் கூடாது என்பதைச் சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி வேறு அபிப்பிராயம் இருக்க முடியாது.

SRI G. G. GURUMURTHI : இப்பொழுது இருக்கக்கூடிய அம்பர் சர்க்காவில் அதிகமான நூலை நூற்கலாம் என்பதுபற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது என்பது சர்க்காருக்கு தெரியுமா ? அது எப்பொழுது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆராய்ச்சிக்கு முடிவே இல்லையென்பதை கனம் அங்கத்தினர் தெரிந்திருப்பார்கள். அவர்கள் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து முடிவு ஏற்பட்டால் அது எற்றுக்கொள்ளப்படும்.